மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : என்னென்ன விதி முறைகள் இருக்கின்றன என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

Detenus at the time of lifting emergency

290. **Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state the number of detenus kept in detention under (i) the Preventive Detention Act and (ii) the Defence of India Rules in this State at the time of lifting the emergency ?**

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இம் மாநிலத்தில் நெருக்கடி நிலை நீக்கப்பட்டபொழுது தடுப்புக் காவல் சட்டத்தின் கீழோ அல்லது இந்தியப் பாதுகாப்பு விதிகளின் கீழோ எவரும் காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

போலீஸ் தலைமை அதிகாரிகள் மாநாடு

***291 வினா.—திரு. ஏ. எம். ராஜா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநில போலீஸ் தலைமை அதிகாரிகள் (ஐ.ஜி. ஆப் போலீஸ்) மாநாடு சமீபத்தில் டெல்லியில் நடைபெற்றதா ?

(இ) ஆம் எனில், அந்த மாநாட்டில் ஐ.ஜி. கலந்து கொண்டாரா ?

(உ) மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ?

(எ) இந்த மாநாட்டு முடிவு குறித்து மாநில அரசுக்கு விளக்க அறிக்கை ஏதேனும் ஐ. ஜி. அனுப்பியுள்ளாரா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :

(அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இந்த மாநாட்டு நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் இந்திய அரசிடமிருந்து இன்னும் பெறப்படவில்லை.

(எ) இக் கேள்வி எழவில்லை.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, சம்யுக்த சோஷலிஸ்டு கட்சியினரான இரண்டு அமைச்சர்கள் டெல்லியில் கைது செய்யப்பட்டதற்குப் பிறகு, காங்கிரஸ் அல்லாத மாநிலங்களுக்கு மத்திய அமைச்சர்கள் சென்றால், அங்கே அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்ற புதிய சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக, போலீஸ் தலைமை அதிகாரிகளின் மாநாடு கூட்டப்பட்டது என்பது உண்மையா ? மத்திய அரசுக்கும், காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகளுக்கும் கருத்து வேற்றுமை ஏற்படுகிற காரணத்தால், மாநில அரசுகள் மத்திய அரசின் ஆணையை ஏற்று நடக்க வேண்டுமென்ற காரணத்தை யொட்டி, போலீஸ் தலைமை அதிகாரிகளுக்கு இந்த மாநாட்டில் திட்டவட்டமான அறிவிப்பு கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பயங்கரமான புகார்கள் என்னுடைய காதுக்கு எட்டவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த மாநாட்டில் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சி புரியும் மாநிலங்களிலுள்ள சட்டம், ஒழுங்கு, அமைதி பற்றி விவாதிக்கப்பட்டதா ?